# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 92/2002

## 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதி (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அச்சட்டத்தின் பாகம் I இன், 2 ஆம் பிரிவில் (துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு) அப்பிரிவிற்கான காப்பு வாசகத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் Iஇன் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

> "எவ்வாறாயினும், செயன்முறைக்குட்படுத்தி மீள் ஏற்றுமதி செய்யப்படும் நோக்கத்திற்காக இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் பொருளொன்றின் விடயத்தில், அப்பொருளின் ஆகு செலவு, காப்புறுதி, கப்பற் கட்டணப் பெறுமதி என்பவற்றின்மீது 0.5 சதவீதம் விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும்.".

3. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2003 சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்குகின்ற தேதி யன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது, பொரு ளொன்றை இறக்குமதி செய்யும் எவரேனும் ஆளிடமிருந்து அத்தகைய பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி கப்பற் கட்டணப் பெறுமதி மீது 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி விதிப்பனவொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப் செல்லுபடி யாக்குதல்.

பானது, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியானதாகச் செய்யப்பட்டிருப்பதாகவும், செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றார்.

திருத்தம் பயனுறும் தேதி.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவிற்கு, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தமானது 2003 சனவரி 1 ஆம் தேதியன்று பயனுறுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.